PRIMARY SCHOOL
CONTINUAL ASSESSMENT 1
TAMIL LANGUAGE
PRIMARY 5
தாள் - 1

Name: ____________________

Class: P5 (   )

Date: ____________________

| | |
|---|---|
| Total Marks | / 90 |
| Class Average | / 90 |
| Class Highest | / 90 |
| | |

Parent's Signature: ____________

Total Time for Booklets A & B: 1hr 40 min

**DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.**

**FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.**

**ANSWER ALL THE QUESTIONS.**



www.testpapersfree.com

P 5

## தொடக்கப் பள்ளி


## தேர்வுத்தாள் - 1

பெயர் : ____________________ தேதி : __________

வகுப்பு : 5 - ___

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. மேம்பாலம்
2. சோம்பல் காரணமாக
3. சாலையின் குறுக்கே
4. மோட்டார் சைக்கிள்
5. மோதிவிட்டது
6. சாலையோரத்தில்
7. நல்லவேளை
8. சாலைவிதிகளை மீறியதால்
9. அறிவுரை
10. விடைபெற்றார்



CA 1
தேர்வுத்தாள் - 1

**Primary School**

**Tamil Language**
**Primary 5TL**

Name : ____________________ Class : ______________

Date : ____________________ Marks [ /90 ]

**'அ' பிரிவு**

<u>வேற்றுமை</u>

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

மாறன் நான்காம் வகுப்பில் படிக்கிறான். அவன் நீச்சல் கற்றுக் கொள்வதற்காக தன் __(1)__ அருகிலுள்ள நீச்சல் குளத்திற்குச் சென்றான். அங்கு பெரியவர்கள் நீந்துவதற்காகக் குளம் ஒன்று இருந்தது. மாறன் அதற்குப் பக்கத்தில் இருந்த __(2)__ குளத்திற்குச் சென்றான். ஒவ்வொரு சனிக்கிழமையும் மாறன் அங்கு செல்வான். அங்கு மற்ற சிறுவர்களும் இருந்தார்கள். அப்போது அவனுக்கு நீச்சல் கற்பிக்கும் பயிற்றுவிப்பாளர் வந்தார். அவர் அனைவரையும் __(3)__ இறங்க சொன்னார். பின் அவர்களுக்குப் புதுவிதமான ஒரு __(4)__ கற்பித்தார். மாறனும் பயிற்றுவிப்பாளர் கற்பித்ததைப் போல் __(5)__ சேர்ந்து செய்தான். பிறகு பயிற்றுவிப்பாளர் எல்லோருக்கும் ஒரு போட்டி வைத்தார். எல்லோரும் நீந்தத் தொடங்கினர். ஆனால் __(6)__ மாறனைப் போல் வேகமாக நீந்த முடியவில்லை. மாறன் முதலாவதாக நீந்தி முடித்தான். பயிற்றுவிப்பாளர் மாறனைப் பாராட்டினார்.

1 (1) வீட்டுக்கு
(2) வீட்டை ( )
(3) வீட்டிலிருந்து
(4) வீட்டில்



www.testpapersfree.com

2 (1) சிறுவர்களை
(2) சிறுவர்களுக்கு
(3) சிறுவர்களின் ( )
(4) சிறுவர்களால்

3 (1) குளத்தின்
(2) குளத்தை
(3) குளத்திற்கு ( )
(4) குளத்தில்

4 (1) பயிற்சியால்
(2) பயிற்சியை
(3) பயிற்சிக்கு ( )
(4) பயிற்சியில்

5 (1) மற்றவர்களின்
(2) மற்றவர்களை ( )
(3) மற்றவர்களோடு
(4) மற்றவர்களுக்கு

6 (1) அவர்களால்
(2) அவர்களை ( )
(3) அவர்களுடன்
(4) அவர்களின்



www.testpapersfree.com

செய்யுள் / பழமொழி

7 முதல் 12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

7 இயல்வது ________.

(1) இகழேல்
(2) பேசேல்
(3) கரவேல்
(4) ஒழியேல்

( )

8 தேடாது ________ பாடாய் முடியும்.

(1) அழிக்கின்
(2) மறைப்பின்
(3) தடுப்பின்
(4) எடுப்பின்

( )

9 அடாது ________ படாது படுவர்.

(1) நினைப்பவர்
(2) செய்பவர்
(3) பார்ப்பவர்
(4) கேட்பவர்

( )



5

www.testpapersfree.com

10 செயற்கரிய செய்வார் ________ சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(1) மற்றவர்
(2) பெரியர்
(3) அறிஞர்
(4) கற்றோர்

( )

11 ஆத்திரக்காரனுக்கு ________ மட்டு.

(1) சொல்
(2) எண்ணம்
(3) செயல்
(4) புத்தி

( )

12 பெருமையும் சிறுமையும் தான் தர ________ .

(1) வருமே
(2) நடக்குமே
(3) ஏற்படுமே
(4) விளையுமே

( )



6

www.testpapersfree.com

<u>தெரிவு விடைக் கருத்தறிதல்</u>
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

தகடூர் என்னும் ஊரை அடுத்துள்ள காட்டில் ஒரு நரி இருந்தது. அது அங்கு வரும் சிறிய உயிரினங்களைக் கொன்று தன் பசியைப் போக்கி வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அதற்கு எந்த மிருகமும் கிடைக்கவில்லை. அது காட்டைப் பல முறை சுற்றி வந்தும் இரை கிடைக்காததால் அது பக்கத்து ஊருக்குள் நுழைந்தது. அது அங்கே பல இடங்களில் அலைந்து திரிந்தது. எங்கும் இரை கிடைக்காததால் அது ஒரு தொழிற்சாலைக்குள் நுழைந்தது. அங்கே தொட்டிகளில் வெவ்வேறு நிறங்களில் சாயங்கள் இருந்தன. அவற்றுள் நீலநிறச் சாயம் இருந்த தொட்டிக்குள் நரி தவறி விழுந்துவிட்டது. அது சிரமப்பட்டுத் தட்டுத் தடுமாறி வெளியே வந்தது. அதன் உடம்பெல்லாம் நீல நிறமாக மாறிவிட்டது. நரி காட்டிற்குள் ஓடி மறைந்தது.

காட்டில் புதிதாக நீல நிறத்தில் ஒரு விலங்கு வருவதைக் கண்ட மற்ற மிருகங்கள் எல்லாம் *அஞ்சின*. அவை அங்குமிங்கும் ஓடின. இதைக் கண்ட நரி மகிழ்ச்சி அடைந்தது. அது தன்னுடைய நிற மாற்றத்தைச் சாதகமாகக் கொண்டு மற்ற மிருகங்களை அடக்கி வைக்கலாம் என்று எண்ணியது. அது எல்லா மிருகங்களையும் அழைத்து, "இனி நான்தான் உங்கள் தலைவன். நான் மிகவும் வலிமை உடையவன். நீங்கள் இனிமேல் எனக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்," என்று <u>*ஆணவத்துடன்*</u> கூறியது. அதன் நிறம் மாறியிருந்ததால் மற்ற நரிகளுக்குக்கூட அதை அடையாளம் காண முடியவில்லை.

அன்றிலிருந்து நரி உண்ட உணவின் மீதியைத்தான் மற்ற விலங்குகள் உண்ணும். நரி எந்தவித சிரமமும் இல்லாமல் காட்டின் தலைவன் என்ற முறையில் சுகமாக வாழ்ந்தது. ஒருநாள் நரி மற்ற மிருகங்களுடன் அமர்ந்திருந்தது. அப்பொழுது எங்கிருந்தோ நரிகள் ஊளையிடும் சத்தம் கேட்டது. அதைக் கேட்ட நரிக்குப் புது *உற்சாகம்* தோன்றியது. அது தன்னை மறந்து ஊளையிடத் தொடங்கியது. அதனைக் கேட்ட மற்ற விலங்குகளுக்கு அது ஒரு நரி என்பது தெரிந்துவிட்டது. அது தங்களை ஏமாற்றியதால் கோபம் கொண்ட விலங்குகள் அதன் மீது பாய்ந்து அதைக் கடித்துக் கொன்றன.



www.testpapersfree.com

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

13 நரி ஏன் பக்கத்து ஊருக்குச் சென்றது ?

(1) ஊரைச் சுற்றிப் பார்க்க
(2) தன் கூட்டத்தைத் தேட
(3) தனக்கு உணவு தேட
(4) விலங்குகளுடன் சேர

( )

14 நரியின் உடல் நீல நிறமாக மாறக் காரணம் என்ன ?

(1) சாயத் தொழிற்சாலைக்குள் சென்றதால்
(2) அது தட்டு தடுமாறி விழுந்ததால்
(3) அது அலைந்து திரிந்ததால்
(4) அது சாயத் தொட்டியில் விழுந்ததால்

( )

15 மிருகங்கள் எதைக் கண்டு அஞ்சின ?

(1) நரியின் உருவத்தை
(2) நரியின் குரலை
(3) நரியின் நிறத்தை
(4) நரியின் வலிமையை

( )



8

www.testpapersfree.com

16 மிருகங்கள் எதனால் நரி உண்டதுபோக மீதியையே உண்டன ?

(1) அது புதிதாக அந்த ஊருக்கு வந்ததால்

(2) அதை அடையாளம் காண முடியாததால்

(3) அது தான் தலைவன் என்று கூறியதால்

(4) நரி மட்டுமே விலங்குகளைக் கொன்றதால்

( )

17 நரி எதனால் ஊளையிட்டது ?

(1) தன் கூட்டத்தைக் கண்டதால்

(2) பழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாததால்

(3) பல நாட்கள் ஊளையிடாததால்

(4) மிருகங்களை ஏமாற்ற நினைத்ததால்

( )



www.testpapersfree.com

## சொற்பொருள்

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18 அஞ்சின
(1) மிரண்டன
(2) நடுங்கின
(3) அதிர்ந்தன
(4) வியந்தன

( )

19 ஆணவத்துடன்
(1) ஆத்திரத்துடன்
(2) இறுமாப்புடன்
(3) பணிவுடன்
(4) இகழ்ச்சியுடன்

( )

20 உற்சாகம்
(1) நாட்டம்
(2) திகைப்பு
(3) வருத்தம்
(4) களிப்பு

( )



10

www.testpapersfree.com

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

எஸ்பிளநாட் அரங்கம் வழங்கும்

நாடகக் கலைப் பள்ளியின் விருதுபெற்ற

## மர்ம மேடை

இக்கதையில் நிறைய மர்ம சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நாடகத்தைப் பார்க்க வருவோரின் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் வீண்போகாது. எனவே தாமதிக்காதீர்கள்! நுழைவுச்சீட்டுகளை இப்போதே வாங்கிக் கொள்ளுங்கள்.

மேடையைக் கலக்க இருப்போர்: பல நாடகங்களைப் படைத்து அனுபவம் பெற்ற அரசு நாடகக்குழுவினர்

நுழைவுச்சீட்டு : $10, $18, $25
நுழைவுச்சீட்டுக்கள் எல்லா சிஸ்டிக் நிலையங்களிலும் கிடைக்கும்
(மதியம் 2 மணி முதல் இரவு 9 மணி வரை)
4 நுழைவுச்சீட்டுகள் வாங்குவோருக்குச் சிறப்புச் சலுகையாக 5% கழிவு தரப்படும்.

நாள்: 4 நவம்பர் 2011(சனி)
நேரம்: மாலை 7 மணி

நாள்: 5 நவம்பர் 2011(ஞாயிறு)
நேரம்: மதியம் 3 மணி

பெருமையுடன் ஆதரவு வழங்குவோர்:
ராதா புஷ்பக்கடை
சிராங்கூன் சாலை



www.testpapersfree.com

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21 இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்பவர் யார் ?

(1) நாடகக் கலைப் பள்ளி
(2) அரசு நாடகக் குழுவினர்
(3) எஸ்பிளநாட் அரங்கம்
(4) ராதா புஷ்பக்கடை

( )

22 இந்நாடகத்தைப் பார்ப்போர் அதில் எத்தகைய காட்சிகளை எதிர்ப்பார்க்கலாம் ?

(1) சோகக் காட்சிகளை
(2) திகில் காட்சிகளை
(3) நகைச்சுவை காட்சிகளை
(4) மந்திரக் காட்சிகளை

( )

23 சிறப்புச் சலுகையைப் பெற ஒருவர் என்ன செய்ய வேண்டும் ?

(1) $ 10 நுழைவுச்சீட்டு வாங்க வேண்டும்
(2) சிஸ்டிக் நிலையத்திற்குச் செல்ல வேண்டும்
(3) நவம்பர் 4-ஆம் தேதி செல்ல வேண்டும்
(4) நான்கு நுழைவுச்சீட்டுகள் வாங்க வேண்டும்

( )



www.testpapersfree.com

ஆ பிரிவு

<u>ஒலி வேறுபாட்டுச் சொற்கள்</u>

பின்வரும் பகுதியில் 24 முதல் 28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

24 கண்ணன் எழுதுப்பொருள்கள் விற்கும் கடைக்குச் சென்றான். அவன் அங்கு ____________ குறைவான ஒரு பேனாவை வாங்கினான். 24 (    )

25 அம்மா சமையலுக்குத் தேவையான பொருள்களை எடுத்து வைத்துக் கொண்டார். பின் அவர் மீன் ____________ சமைக்கத் தொடங்கினார். 25 (    )

26 குளிர் பிரதேசங்களில் பெரும்பாலான மிருகங்கள் வாழ்வதில்லை. அங்கே ____________ கரடிகளே அதிகமாகக் காணப்படுகின்றன. 26 (    )

27 நாம் மற்றவர்களிடம் எப்பொழுதும் பணிவாகப் பேச வேண்டும். அவர்கள் ____________ புண்படும்படி பேசக்கூடாது. 27 (    )

28 சில பறவைகள் மீன்களைப் பிடித்து தின்னும். இதனால் அவற்றின் ____________ நீளமாக இருக்கும். 28 (    )

| | |
|---|---|
| (1) அலகு | (2) விளை |
| (3) பனி | (4) அழகு |
| (5) விலை | (6) பணி |
| (7) மணம் | (8) கறி |
| (9) கரி | (10) மனம் |

10



www.testpapersfree.com

முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் 29 முதல் 35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

ஜப்பான் நாட்டில் கிமோட்டோ என்ற ஏழை இளைஞன் ஒருவன் இருந்தான். அவனுக்கு யாரும் இல்லை. அவன் அந்த ஊரில் உள்ளவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்து வாழ்ந்து வந்தான். அனைவரும் அவனை ஓர் அடிமையைவிட __(29)__ நடத்தினர். அவர்கள் அவனிடம் கடுமையான வேலைகளைச் செய்ய சொல்வார்கள். ஆனால் அவனுக்கு __(30)__ தராமல் உணவு மட்டும் கொடுப்பார்கள். இதனால் கிமோட்டோ தங்க இடம் கூட இன்றி __(31)__. ஒரு நாள் அவன் காட்டுப் பக்கமாக நடந்து சென்று கொண்டிருந்தான். அவனுக்குக் களைப்பாக இருக்கவே ஒரு __(32)__ அமர்ந்து ஓய்வெடுத்தான். அப்போது அவனுக்குப் பக்கத்தில் மண்மேடு ஒன்று இருந்தது. அவன் ஆவலுடன் அதை __(33)__ பார்த்தான். அதனுள் ஒரு பெட்டி இருந்தது. கிமோட்டோ பெட்டியைத் திறந்தான். அதில் __(34)__ வைரக் கற்கள் இருந்தன. கிமோட்டோ மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் அவற்றை __(35)__ பணக்காரன் ஆனான். அவன் ஒரு மாளிகையைக் கட்டி அதில் இன்பமாக வாழ்ந்து வந்தான்.

29 (    )
30 (    )
31 (    )
32 (    )
33 (    )
34 (    )
35 (    )

| | | |
|---|---|---|
| (1) தோண்டி | (2) குளத்தில் | (3) பணம் |
| (4) விலைமதிப்பற்ற | (5) துன்பப்பட்டான் | (6) மிதித்து |
| (7) மரத்தடியில் | (8) போலியான | (9) மோசமாக |
| (10) அன்பாக | (11) விற்று | (12) சம்பளம் |

14



14

www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல்

ஒரு குளத்தில் வாழ்ந்த இரண்டு மீன்களும் ஒரு தவளையும் நண்பர்களாக இருந்து வந்தன. இரை தேடும் நேரங்கள் தவிர அவை மற்ற நேரங்களில் மகிழ்ச்சியாகப் பேசிப் பொழுதைக் கழித்தன. ஒரு நாள் அவை கரை ஓரமாக விளையாடிக் கொண்டிருந்தன. அப்பொழுது கையில் வலைகளுடன் சில மீனவர்கள் அங்கு வந்தனர். அவர்கள் ஏரியைச் சுற்றிப் பார்த்தனர். பின்னர், அவர்களில் ஒருவன், "இந்த ஏரியில் தண்ணீர் அதிகம் இல்லாததால் வலை வீசி மீன் பிடிப்பது எளிது. ஏராளமான மீன்கள் கிடைக்கும்போல் இருக்கிறது," என்று கூறினான். அப்பொழுது மற்றொருவன், "இப்பொழுது இருட்டிவிட்டது. அதனால் நாளை காலையில் வந்து வலை வீசுவோம்," என்று கூறினான். பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றனர்.

அவர்களது உரையாடலைக் கேட்டத் தவளை பயந்து நடுங்கியது. பின் தன் நண்பர்களைப் பார்த்து, "நண்பர்களே! நமக்கு ஆபத்து நெருங்கிவிட்டது. இனிமேல் நாம் இங்கிருப்பது நல்லதல்ல. வேறு ஓர் இடம் சென்றுவிடுவோம்," என்று கூறியது. அதைக் கேட்ட மீன்கள், "அவர்கள் சாதாரணமாக வாயால் பேசிவிட்டுத் தானே சென்றார்கள். செயலில் இறங்கவில்லையே. நீ ஏன் கவலைப்படுகிறாய்?" என்று கேட்டன. அதற்கு தவளை, "இங்கிருந்து நாம் தப்பிக்காவிட்டால் நாளை நாம் இறப்பது உறுதி," என்று கூறியது.

மீன்கள் தவளையிடம், "மீனவர்கள் நாளை வலை விரிக்கட்டும். நாங்கள் எப்படி தப்பித்துக் கொள்கிறோம் என்பதைப் பார். எங்களிடம் நிறைய யோசனைகள் இருக்கின்றன. உன்னையும் எங்களால் காப்பாற்ற முடியும்," என்று கூறின. அதைக் கேட்ட தவளை, "ஆபத்து வரும்முன் தப்பித்துக் கொள்வதே புத்திசாலித்தனம்," என்று கூறி அன்று இரவே வேறொரு குளத்தைச்



15

www.testpapersfree.com

சென்றடைந்தது. மறுநாள் மீனவர்கள் குளத்திற்கு வந்து பெரிய வலையை விரித்தனர். குளத்திலிருந்த ஆமை, நண்டு, மீன்கள் போன்ற எல்லா உயிரினங்களும் அதில் சிக்கிக் கொண்டன. இரண்டு மீன்களும் வலையில் சிக்கிக்கொள்ளக் கூடாது என்று எவ்வளவோ முயன்று பார்த்தன. ஆனால் முடியவில்லை. அவை வலையில் சிக்கிக் கொண்டன. அப்பொழுது மீன்களுக்குத் தவளை சொன்னது நினைவுக்கு வந்தது. ஆபத்து வரும்வரை அலட்சியமாக இருப்பது அறிவில்லாத செயல் என்பதை மீன்கள் அறிந்துகொண்டன. தவளை சொன்னதைக் கேட்டிருந்தால் உயிர் பிழைத்திருக்கலாமே என்று எண்ணிக் கொண்டே உயிரைவிட்டன.

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36 எப்பொழுது மீன்களும் தவளையும் பேசிக்கொள்வதில்லை ? (2 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

2



16

www.testpapersfree.com

37. மீனவன் ஏன் ஏராளமான மீனகள் கிடைக்கும் என்று கூறினான்? (3 ம.)

______________________________

______________________________

38) தவளை ஏன் வேறு ஓர் இடத்திற்குச் செல்ல ஆலோசனை கூறியது? (4 ம)

______________________________

______________________________

39) மீனவர்கள் பேசியதை மீன்கள் ஏன் அலட்சியப்படுத்தின? ( 4 ம)

______________________________

______________________________

40) இறுதியில் தவளை என்ன செய்தது? ஏன்? ( 4 ம.)

______________________________

______________________________

41) மீன்கள் எதை உணர்ந்து கொண்டன? (3 ம)

______________________________

______________________________



www.testpapersfree.com

CA- 1

P-5 தேர்வுத்தாள்-- 1

மாறன் நான்காம்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1)1 | 2) 3 | 3) 4 | 4) 2 | 5) 3 | 6) 1 |
| 7) 3 | 8) 1 | 9) 2 | 10)2 | 11)4 | 12) 1 |
| 13) 3 | 14)4 | 15)3 | 16)3 | 17)2 | 18)1 |
| 19) 2 | 20) 4 | 21) 3 | 22) 2 | 23) 4 | 24)5 |
| 25) 8 | 26) 3 | 27) 10 | 28)1 | 29)9 | 30)12 |
| 31)5 | 32)7 | 33)1 | 34)4 | 35)11 | |

36) இரை தேடும் நேரங்களில் மீன்களும் தவளைகளும் பேசிக்கொள்வதில்லை.

37)ஏரியில் தண்ணீர் அதிகம் இல்லாததால் வலி வீசி மீன் பிடிப்பது எளிது. அதனால் ஏராளமான மீன்கள் கிடைக்கும் என்று மீனவன் கூறினான்.

38)மீன்களுக்கு ஆபத்து நெருங்கி விட்டதாலும் என்பதாலும் இனிமேல் அவை அங்கிருப்பது நல்லதல்ல என்பதாலும் தவளை அவற்றை வேறு ஓர் இடத்திற்குச் செல்ல ஆலோசனை கூறியது.

39)மீனவர்கள் சாதாரணமாக வாயால் பேசி விட்டுத் தானே சென்றார்கள், செயலில் இறங்கவில்லையே என்று மீன்கள் கூறியதால் மீனவர்கள் பேசியதை அவை அலட்சியப்படுத்தின.

40)இறுதியில் தவளை அன்று இரவே வேறொரு குளத்தைச் சென்றடைந்தது. ஆபத்து வரும் முன் தப்பித்துக் கொள்வதே புத்திசாலித்தனம் என்று எண்ணியதால் தவளை அவ்வாறு செய்ததது.

41) மீன்கள் ஆபத்து வரும்வரை அலட்சியமாக இருப்பது அறிவில்லாத செயல் என்பதை அறிந்து கொண்டன.



www.testpapersfree.com